## நீர் வளங்கள் சபை – 2017

நீர் வளங்கள் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 42 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1964 இன் 29 ஆம் இலக்க நீர் வளங்கள் சட்டத்தின் 17(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை சபையின் தலைவருக்கு 2018 யூன் 21 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை நீர் வளங்கள் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மஹியங்கனை கல்வி வலயத்தில் 09 பாடசாலைகளில் குழாய் கிணறுகள் நிர்மாணத்தின் புவிச்சரிதவியல் அளவை நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் 02 பாடசாலைகளுக்குரிய ரூபா 82,110 தொகை மாத்திரம் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 298,252 தொகையான வருமானத்திற்கு எடுக்காமல் கிடைத்த முற்பணத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கணக்கீட்டு வழக்குகள் காரணமாக இரண்டுஊழியர்களுக்காக ரூபா 29,721 ஆன பணிக்கொடை கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) ஒரே கொடுக்கல் வாங்கல்களுக்காக இரண்டு பட்டியல்கள் வழங்கப்பட்டதன் காரணமாக ரூபா 44,677 ஆல் கிடைத்த சேவை முற்பணம் குறைத்தும் வருமானம் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கடன்பட்டோர் மீதிகளின் பெறுமதியான ரூபா 18,849,408 ஆல் ரூபா 3,178,291 ஓராண்டிற்கு மேற்பட்ட பழைய கடன் மீதிகளாக இருந்ததுடன் மொறகஹகந்த செயற்திட்டமொன்றிலிருந்து பெற வேண்டிய ரூபா 860,800 தொகையான கடன்மீதி 2015 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் அறவிடப்படாமல் காணப்பட்டது.

(ஆ) 214 நபர்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்து பல்வேறு சேவைகள் நிறைவேற்றிக் கொடுப்பதற்காக கிடைத்த ரூபா 82,380,321 தொகையான சேவை முற்பணங்களிலிருந்து ரூபா 2,611,379 தொகை ஒரு வருட காலத்தை மிகைத்திருந்த போதிலும் குறிப்பிட்ட வேலைகளை நிறைவேற்றி கொடுப்பதற்கு சபை தவறியிருந்தது.

**2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1964 இன் 29 ஆம் இலக்க நீர் வளங்கள் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 42 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் 3 ஆம் பிரிவு | திருத்தப்பட்ட சட்டத்தின் பிரகாரம் 18 பேருடன் கூடிய மதியுரைக் குழுவொன்று தாபிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 9 பேருடன் கூடிய மதியுரைக்குழுவொன்று தாபிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்காக சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பந்தி | 27 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது அவர்களின் சம்பளத்திற்கு மேலதிகமாக ரூபா 1,964,633 ஆன விஷேட படியொன்று சபையினால் செலுத்தியிருந்த போதிலும் அதற்காக திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 6,743,000 ஆன மிகையொன்று காணப்பட்டதுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 27,092,000 இற்கான தொகையாக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 20,349,000 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் செயற்பாட்டு வருமானம் ரூபா 59,243,000 ஆல் அதிகரித்திருந்த போதிலும் ஆண்டின் நிர்வாக செலவினம் ரூபா 38,057,000 ஆலும் ஏனைய செயற்திட்ட செலவினம் ரூபா 28,121,000 ஆல் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகியிருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளின் பகுப்பாய்வு செய்யும் போது 2013 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான நிதி விளைவுகளில் பற்றாக்குறையொன்று காணப்பட்ட போதிலும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கல் செய்தபோது சபையின் பங்களிப்பு 2013 ஆண்டு முதல் முன்னேற்றமடைந்து மீளாய்வாண்டின் போது ரூபா 227,278,000 தொகையாகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் 2017 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றப்பட வேண்டிய மொத்த செயற்பாடும் நிறைவேற்றுவதற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதற்கு முன்னைய பாதீட்டு மதிப்பீடு மற்றும் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. செயல்நடவடிக்கைத் திட்டம், பாதீட்டு மதிப்பீடு மற்றும் பெறுகைத் திட்டம் என்பவற்றை ஒன்றுக்கொன்று ஒப்பிடக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றல் தொடர்பான அறிக்கையை சபை தயாரித்திருந்த போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் ஒவ்வொரு செயற்பாட்டிற்குரிய நிதிச் செயலாற்றல் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டின் மூலம் 08 விடயங்களின் கீழ் 575 ஆய்வு அலகுகள் நிறைவேற்றுவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் சபையினால் 356 ஆய்வு அலகுகள் மாத்திரம் நிறைவேற்றியிருந்ததுடன் நிறைவேற்றப்படாத எண்ணிக்கை 219 தொகையாக இருந்தது. செயற்பாடுகள் நிறைவேற்றப்படாத எண்ணிக்கை 24 சதவீதம் முதல் 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. அதற்காக சபைக்கு சொந்தமான நீர் விஞ்ஞானிகளின் பற்றாக்குறை, நாட்டில் காணப்பட்ட அனர்தத் சந்தர்ப்பங்களுக்கு அவர்களை ஈடுபடுத்த நேர்நதமை வளங்கள் மற்றும் தொழில்நுட்ப பதவியணியினர் வரையறுக்கப்பட்டதாக ஆகிய காரணங்கள் தாக்கமளித்திருந்தது.

**(ஆ) ஆய்வு கற்கைகளை செயற்படுத்துவதில் குறைபாடுகள்**

(i) 2012 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை நீர் மீதான நிலைமை மற்றும் அவற்றில் பொது மக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைப் பரிசோதனை செய்வதற்காக ரூபா 133,550,000 இற்கான மதிப்பீட்டுக் கிரயத்திற்கு 08 ஆய்வுக் கற்கைகள் ஆரம்பித்திருந்ததுடன் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 67,159,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த கற்கை செயற்திட்டங்களில் 04 இனை 2017 திசெம்பர் 31 திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் அந்த 04 ஆய்வுக் கற்கைகளை எதிர்பார்த்த விதமாக பூர்த்தி செய்வதற்கு முடியாமையினால் ஆய்வுக் கற்கைகளின் மூலம் எதிர்ப்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆய்வுக் கற்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக முழு நேர அடிப்படையில் ஆய்வு உத்தியோகத்தரொருவர் நியமனம் செய்யப்பட வேண்டுமெனினும் சபையினால் அனைத்து ஆய்வுக் கற்கைகளுக்குமாக ஆய்வு உத்தியோகத்தராக சபையின் பொது முகாமையாளர் நியமனம் செய்யப்பட்டிருந்தார். அவரது வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக ஆய்வு கற்கைகளில் பங்குபற்ற நேரிட்டுள்ளமையால் திட்டமிட்டுள்ள காலப்பகுதியில் ஆய்வுக் கற்கைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

(iii) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஆய்வுக் கற்கைகளுக்கான மதிப்பீட்டுத் தொகையில் அடைந்திருந்த நிதி முன்னேற்றம் 15 சதவீதம் முதல் 65 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டதுடன் அச் செயற்திட்டங்களின் தாமதக் காலம் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையாக இருந்தது. மேலும் ஆய்வு கற்கைகளை நீடிக்கும் போது அதற்காக காரணம் மற்றும் மதிப்பீடுகள் என்பன காட்டப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2017 யூன் 29 ஆந் திகதி மதியுரைக் குழு கூடியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட 08 ஆய்வுகளின் அறிக்கை மதியுரை கூட்டத்தின் குழுவின் ஆலோசனைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வேறு அரச நிறுவனங்களுக்குரிய 03 வாகனங்கள் 1981, 2009 மற்றும் 2016 ஆம் ஆண்டு முதல் சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும் அவ்வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 31 இருப்பு உருப்படிகளில் மிகையும் 134 உருப்படிகளில் பற்றாக்குறையும் இனங்காணப்பட்டிருந்த போதிலும் கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

தேவைப்பாட்டினை இனங்காணாமல் இயந்திர உபகரணங்களுக்கான உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்த காரணத்தினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 171,516,000 ஆன இருப்புக்களில் ரூபா 76,474,390 மெதுவாக அசையும் இருப்புக்களும் காலாவதியான இருப்புக்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

## 4.4 முறையாக கையேற்கப்படாத காணிகளில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்

சபையின் தலைமை அலுவலகம் இரத்மலான மற்றும் வவுனியா வேலைத் தளங்கள் மற்றும் அநுராதபுர சுற்றுலா விடுதிகள் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்கள் சபைக்கு கையேற்கப்படாமல் மீளாய்வாண்டின் தொடக்கம் வரையிலும் அக்காணிகளில் ரூபா 6,258,000 வெளியிடப்பட்டு புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டும் காணப்படும் கட்டிடங்களில் மாற்றங்களும் சபையால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**4.5 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த சபையின் வளங்கள்**

2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவுக்கு முரணாக சபையின் கடமையை நிறைவேற்றுவதற்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த சாரதியொருவர் சபையின் செயற்பாடுகளுக்கு புறம்பாக வரிசை அமைச்சின் செயற்பாடுகளுக்காக 2017 சனவரி 11 ஆந் திகதி முதல் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 145,392 தொகை சம்பளம் மற்றும் படியாக சபையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**5. நிலைபேறான அபிவிருத்தி**

**5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளுதல்**

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ''நிகழ்ச்சி நிரல்'' பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனமொன்றும் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மீளாய்வாண்டிற்குரியதாக நீர் வளங்கள் சபையினால் தமது விடயப்பரப்பிற்கு கீழ் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

(அ) மேற்குறித்ததன் பிரகாரம் 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக நீர் வளங்கள் சபை அறிந்திருந்த போதிலும் அது தொடர்பான இலக்குகள், அடிப்படை தரவுகள், இலக்குகள் அடையப்பட வேண்டிய மைல்கல் உட்பட செயன்முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்துவது தொடர்பாக நீர் வளங்கள் சபையின் செயற்பாடு தொடர்பாக அக்கறை செலுத்தும் தரப்பினர்களுக்காக சுற்றாடல் அமைச்சு, தேசிய நீர் வளங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபை, புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகம், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் போன்ற தரப்புகளை இனங்கண்டிருந்த போதிலும் நிறுவனத்திற்குரிய இலக்கை வடிவமைக்கும் போது பங்குபற்றுனர்களின் நுழைவு நிரூபணமாவில்லையென மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) ஏதேனும் செயற்பாடொன்றின் சரியான செயலாற்றலை மதிப்பீடுவதற்காக சரியான தரவுகள் அடிப்படையொன்று காணப்படுதல், அத்தியாவசியமாக இருந்த போதிலும், சபையினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதை மதிப்பீடுவதற்காக சரியான தரவு அடிப்படையொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதற்காக நிதி ஏற்பாடு போதியளவு காணப்படாமை, பௌதீக வசதிகள் போதியளவில் இல்லாமை மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்கள், காணப்படாமை போன்ற விடயங்கள் காரணமாக உள்ளதென மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி அடையும் போது குறித்த செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கான தேவையான வருடாந்த அடைவுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தயார்ப்படுத்தும் போது ஏனைய நிறுவனங்களுடன் உரிய கூட்டிணைப்பொன்று இல்லாமை காரணமாக இலக்கிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கும் திட்டங்களை தயாரித்து தயார்படுத்தல் என்பன மந்த கதியில் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது.

## 6. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்கு இரண்டு உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் மற்றும் உள்ளீட்டு உதவியபளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். இதன் பிரகாரம் தொழிநுட்ப மற்றும் பொறியியல் நுட்ப முறைகளை பயன்படுத்தும் சபையின் கருமங்களை கணக்காய்வு செய்வதற்காக தகைமையுடைய உத்தியோகத்தர்கள் உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்கு இணைப்பதற்கு சபை தவியிருந்தது.

### 6.2 பெறுகை செயற்பாடு

பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட உருப்படிகள் தொடர்பில் கவனம் செலுத்தாமல் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 06 உருப்படிகள் பெறுகை செய்யப்பட்டிருந்ததடன் 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் பெறுகைக்காக எதிர்பார்க்கப்பட்ட 10 உருப்படிகள் அத்திகதிகளின் போது கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் வருடாந்த பெறுகை திட்டத்தின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானம் என்பவற்றிற்கு இடையே 12 சதவீதம் முதல் 138 சதவீதம் வரையான வீச்சிலலும் பாதிடப்பட்ட செலவுகள் மற்றும் உள்ளவாறான செலவுகளுக்கு இடையே 10 சதவீதம் முதல் 1094 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 6.4 ஆண்டறிக்கை சபைக்கு முன்வைத்தல்

2016 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.5 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

06 வருட கட்டாய சேவைக்காலத்திற்கு மற்றும் ரூபா 1,308,699 இற்கான பிணை முறியொன்றின் கீழ் 2005 ஆண்டின் போது புலமைப்பரிசில் ஒன்றிற்காக வெளிநாடு சென்றிருந்த பெண் புவிச்சரிதவியலாளர் ஒருவர் புலமைப் பரிசிலின் பின்னர் உடன்பட்ட சேவைக்காலத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் வேறு நிறுவனம் ஒன்றிற்கு விடுவிக்கப்பட்டிருந்தார். அவ்விடுவித்தலுக்காக 04 வருட கால கட்டாய சேவைக் காலத்திற்கு மற்றும் ரூபா 435,600 இற்கான பிணை முறியொன்றிற்கு கையொப்பமிடப்பட்டிருந்தது. பெண் உத்தியோகத்தர் உடன்பட்டிருந்த 02 உடன்படிக்கைகளுக்கு இணங்க செயற்படாமல் 2011 ஆண்டு முதல் சபையின் சேவையில் இருந்து நிரந்தரமாக விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கைகளின் பிரகாரம் சபைக்குக் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 1,744,299 இற்கான பிணை தொகையை மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | சொத்துக்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் வருமானங்கள் மற்றும் செலவுகள் உரிய முறையில் கணக்கீடு செய்யாமை. |
| (ஆ) | செயலாற்றல் | எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் நிதி மற்றும் பௌதீக செயலாற்றலை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்காமை |
| (இ) | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் | தீர்ப்பதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) | ஆய்வுக் கற்கைகள் மேற்கொள்ளல் | திட்டமிட்டுள்ளவாறு ஆய்வுக் கற்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | சொத்துக்களை ஆவணப்படுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்காமை. |